உ

ஓம் சக்தி

# அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்

ஆனைமலை



tnhrce.org

பசலி 1427

# குண்டம் திருவிழா அழைப்பிதழ்

16.01.2018 முதல் 03.02.2018 வரை

## திருத்தலச் சிறப்பு

பொதுவாக சக்தி பீடங்கள் 65 என்பர். இதனை தவிர்த்து ஆங்காங்கே காவல் தெய்வமாக வனதேவதையாக மக்கள் வழிபடும் தெய்வமாக அன்னை சக்தியின் ஆலயங்கள் தமிழகத்தில் பல உள்ளன. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழியை இத்தகைய தெய்வங்கள் உறுதி செய்கின்றன. இத்தகைய நீதி தெய்வங்களில் ஒன்றே அருள்மிகு மாசாணியம்மன்.

இத்திருத்தலம் கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலிருந்து தென்மேற்கில் 15 கிலோ மீட்டர் தொலைவில் ஆனைமலை உப்பாற்றின் வடகரையில் சுமார் 17 அடி நீளத்தில் அம்மன் படுத்திருக்கும் திருக்கோலத்தில் அமைந்துள்ளது.

சங்ககாலத்தில் உம்பற்காடான ஆனைமலையில் நடந்த கதை . இப்பகுதியை நன்னன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான். இவன் ஆழியாற்றங்கரையில் இருந்த தன் அரச தோட்டத்தில் ஒரு மாமரத்தை வளர்த்து வந்தான். அம்மரத்தின் கிளைகளையோ, கனிகளையோ யாரும் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணையிட்டிருந்தான். ஒருநாள் கொங்கிளங்கோசர்களின் குலஇளம்பெண் ஒருத்தி தன்ஒத்த இளவயது பெண்களுடன் ஆழியாற்றில் நீராட வந்தபோது அந்த மாமரத்திலிருந்து தானாகவே ஆற்றில் உதிர்ந்து வந்த மாங்கனியை உண்டுவிட்டாள். இது தெரிந்த நன்னன் , அவளை கொலை செய்து விடும்படி உத்தரவிட்டான். அவளது தந்தை அந்தப் பெண்ணின் எடையளவு தங்கத்தால் செய்த பாவை ஒன்றையும்,81 களிற்றையும் அந்தப் பெண் அறியாது செய்த தவறுக்காகத் தண்டம் இழைப்பதாகக் கூறியும் ஏற்காமல் அந்தப் பெண்ணைக் கொலை செய்து விட்டான்.

tnhrce.org

கொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணை மயானத்தில் சமாதிப்படுத்தி அதன்மீது அந்தப் பெண்ணைப்போன்று ஓர் உருவத்தை மயான மண்ணில் அமைத்து வழிபட்டனர். மயானத்தில் சயனித்த நிலையில் இருந்த அப்பெண் நாளடைவில் மாசாணி என அழைக்கப்பட்டாள். பெண்கொலை புரிந்த நன்னனை கொங்கிளங்கோசர்கள் படையெடுத்து அவனைத் தண்டித்து அவனது காவல் மரமான மாமரத்தையும் வெட்டினர் என்பதும் தமிழ்ப்புலவர்கள் பெண் கொலை புரிந்த நன்னன் மரபினரைக்கூட பிற்காலத்தில் பாட மறுத்துவிட்டனர் என்பதும் வரலாறு.

மாசாணியம்மனின் காலடியில் இருப்பது லவணாசுரன். தர்மத்தின் தலைவனான தயாநிதி ராமச்சந்திரமூர்த்தி சேதுபீடம் நோக்கிப் பயணித்த காலத்து சபரிபீடம் வரும் பாதையில் பாதகங்கள் புரிந்த லவணாசுரனை அடக்க ஆதிசேஷன் அம்சமாகிய இலட்சுமணரை அனுப்பி ஒடுக்கினார் . தவ பலத்தினால் மீண்டும் லவணாசுரன் எழுந்து விடாமல் தடுத்திட விஸ்வரூபமெடுத்த அன்னை மாசாணித்தாய் தன் காலடியிலேயே தமயனுக்காக அடக்கிவைத்தாள். அம்மனின் பாதத்துளி பட்ட மாத்திரத்திலேயே லவணாசுரன் அடங்கிவிட்டான். ஆனைமலை லவணநதி தீரத்து சஞ்சீவினி வனம் மாசாண பீடம் வருகை தந்து பக்தர்கள் நீராடி நீரணிந்து வழிபாடு செய்ய வேண்டும். தம்மை நாடிவந்து சேவிக்கும் பக்தர்களுக்கு வேண்டியதை வேண்டியவண்ணம் அருள் பாலிக்கிறாள். செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மற்றும் அமாவாசை நாட்களில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டு வந்து வழிபாடு செய்கின்றனர்.

எண்ணிய எண்ணியாங்கெய்த எண்ணிய அடியவர்க்கருளும்
புண்ணிய முதலே ! பூரணப்பொருளே ! போக்கருஞ் சுடர் விளக்கே !
தண்ணிய மலைராச சாந்தரூபியே! சஞ்சீவினி வனத்து மருந்தே!
மண்ணிய மணியே மாசாணித்தாயே! மலர்தாள் சரணமம்மா! சரணம்!

# குண்டம் திருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்.

tnhrce.org

வணக்கம்!

சக்கரகிரி என்னும் அருட்தன்மை வாய்ந்த ஆனைமலை தொடரில் இமயவரையிலிருந்து தோன்றி ஆன்பொருனை நதி, அம்பாவதி, ஆழியாறு என்னும் பெயர்களில் பூமியில் படர்ந்து,எங்கும் வளங்களை நிரப்பி, பயன்சார் செடி, கொடி மரங்களை வளர்த்து, உயிர்களை காத்து, இம்மையிலும் மறுமையிலும் நற்கதி தரும் உப்பாற்றின் கரையிலே சயனக்கோலத்தில் வீற்றிருக்கும் தயாபரி, தர்மத்தின் தலைவரான தயாநிதி ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்காக கடலிலங்கை கோமான் லவணாசுரனை அடக்கி தன் காலடியிலேயே வைத்த மயானத்து அரசி, நீதிக்கும்,நேர்மைக்கும் அச்சாணியாக விளங்கி, காரண காரியமாக கண்டிக்கவும், தண்டிக்கவும் செய்து நீதியை நிலைநாட்டும் நீதி தேவதையுமான **அருள்மிகு மாசாணியம்மனின் குண்டம் பெருந்திருவிழா** **நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2049 ஹேவிளம்பி வருடம் தைத்திங்கள் 3-ம் நாள் (16.01.2018) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்குமேல் கொடியேற்றுதல்** தொடங்கி **தைத்திங்கள் 21-ம் நாள் (03.02.2018) சனிக்கிழமை** வரை திருக்கோயில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள வண்ணம் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. அது சமயம் மெய்யன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னையின் அருள் பெற அன்புடன் வேண்டுகிறோம்.

திரு **வா. ஆனந்த்** பி.எஸ்சி., பி.எல்.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

திரு. **மு. கார்த்திக்** பி.எஸ்சி., பி.எல்.,
தக்கார் / துணை ஆணையர் / செயல் அலுவலர்(கூ.பொ)

# முக்கிய திருவிழா நாட்கள்

| | | |
|---|---|---|
| 16.01.2018<br>தை 3 செவ்வாய்க்கிழமை | காலை 8.00 மணிக்குமேல் | கொடியேற்றம் |
| 29.01.2018<br>தை 16 திங்கட்கிழமை | நள்ளிரவு 1.00 மணிக்குமேல் (14வது நாள்) | மயான பூஜை |
| 30.01.2018<br>தை 17 செவ்வாய்க்கிழமை | காலை 7.30 மணி | சக்தி கும்பஸ்தாபனம் |
| | மாலை 6.30 மணி (15வது நாள்) | மகா பூஜை |
| 31.01.2018<br>தை 18<br>புதன்கிழமை | காலை 10.00 மணி | குண்டம் கட்டுதல் |
| | இரவு 9.00 மணி | சித்திரத்தேர் வடம் பிடித்தல் |
| | இரவு 10.30 மணி (16வது நாள்) | குண்டம் பூ வளர்த்தல் |
| 01.02.2018<br>தை 19 வியாழக்கிழமை | காலை 8.00 மணி (17வது நாள்) | குண்டம் இறங்குதல் |
| 02.02.2018<br>தை 20 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | கொடி இறக்குதல் |
| | காலை 10.30 மணி | மஞ்சள் நீராடல் |
| | இரவு 8.00 மணி (18வது நாள்) | மகா முனி பூஜை |
| 03.02.2018<br>தை 21 சனிக்கிழமை | காலை 11.30 மணி (19வது நாள்) | மகா அபிசேகம்<br>அலங்கார பூஜை |

# கலை நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 16.01.2018<br>கொடியேற்றம் | மங்கள இசை:<br>திரு. **காளியப்பன் குழுவினர்,** வேட்டைக்காரன்புதூர் | உபயம் : **திரு.எம்.எஸ்.முரளி** அவர்கள்,<br>அடிவள்ளி. |
| 20.01.2018 | இரவு 7.00 மணிக்கு<br>ஆன்மீகச் சொற்பொழிவு | நிர்வாகி,<br>**மகாத்மா காந்தி ஆசிரமம்,** ஆனைமலை |
| 21.01.2018 | இரவு 7.00 மணிக்கு<br>ஆன்மீக இசை நிகழ்ச்சி | நிர்வாகி,<br>**மகாத்மா காந்தி ஆசிரமம்,** ஆனைமலை |
| 29.01.2018<br>மயானபூஜை | இரவு 9.00 மணிக்கு<br>கோவை பிரேம்ஸ் இன்னிசைக் குழு வழங்கும்<br>பக்தி மெல்லிசை | திரு. **சி.கே. சசிக்குமார்** அவர்கள்<br>ஆதித்யா ஏஜென்சீஸ், கோவை |
| 30.01.2018 | SNMV கல்லூரி பேராசிரியர்கள் வழங்கும் பட்டிமன்றம்<br>இன்றைய சூழலில் மக்களிடையே ஆன்மீக சிந்தனை<br>வளர்ந்துள்ளதா? குறைந்துள்ளதா?<br>நடுவர் முனைவர் **எஸ்.டி. கலையமுதன்**<br>**வளர்ந்துள்ளது:** முனைவர் **உமாமகேஸ்வரி**, முனைவர் **செந்தில்குமார்**<br>**குறைந்துள்ளது:** திருமதி. **சுமதி**, செல்வன் **தமிழரசன்** | திருமதி. **கே.பி.பிரேமாவதி,** கோவை |
| 31.01.2018<br>குண்டம்<br>பூ வளர்த்தல் | இரவு 11.00 மணிக்கு<br>கோவை சரண் மெலோடியஸ் குழுவினர்<br>வழங்கும்<br>நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும்<br>பக்தி இன்னிசை | திரு. **ஏ.ஆர்.வி. சாந்தலிங்ககுமார்** அவர்கள்<br>முன்னாள் பேரூராட்சித்தலைவர், ஆனைமலை<br>திரு. **தளபதி நீலகண்டன்** அவர்கள்<br>முன்னாள் 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>**தளபதி ப்ளக்ஸ்,** பொள்ளாச்சி<br>திரு. **ஆர். ரத்னமுத்துக்குமார்** அவர்கள்<br>நல்லிக்கவுண்டன்பாளையம்<br>திரு. **டி. பிரபு** அவர்கள், பாலமநல்லூர்<br>திரு. **சதீஷ்குமார்** அவர்கள்<br>எஸ். கே. சொல்யூசன், & பைனான்ஸ், பொள்ளச்சி<br>திரு. **ஆர். ரமேஷ்குமார்** அவர்கள்<br>சிவசக்தி லாரி சர்வீஸ், பொள்ளாச்சி<br>திரு. **எஸ். ராதாகிருஷ்ணன்** அவர்கள்<br>ஸ்ரீ ராகவேந்திரா கார்ஸ், பொள்ளாச்சி |

# அன்னதானத்திட்டம்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் கூடிய அன்னதானத்திட்டம் இத்திருக்கோயிலில் 15.08.2002-ம் தேதியன்று துவக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அன்பர்கள் தங்களுடைய பிறந்த நாள், மணநாள், மனைவி, மக்கள் மற்றும் பெற்றோர்கள் பிறந்த நாள் போன்ற முக்கிய நாட்களிலும் மற்றும் அவரவர் விரும்பும் நாட்களிலும் இத்திட்டத்தில் ரூ.2500/- செலுத்தி 100 நபர்களுக்கு ஒருநாள் அன்னதானம் செய்யலாம். கட்டளைதாரராக விரும்பும் அன்பர்கள் ரூ. 30,000/- செலுத்தினால் இத்தொகையை வங்கியில் முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகையில் ஆண்டுக்கு ஒருமுறை அவர்கள் விரும்பும் நாளில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்னதானத்திற்கு வழங்கப்படும் தொகைக்கு (வருமான வரி சட்டப்பிரிவு 80-G-ன்படி) வருமான வரிவிலக்கு உண்டு.

திருக்கோயிலில் நடைபெற்று வரும் அன்னதானம், நான்கு கால அபிஷேகம் மற்றும் தங்கத்தேர் உலாவில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் திருக்கோயில் இணையதளத்தின் மூலமாக முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| 1. | அர்ச்சனை | 2.00 |
| 2. | தேங்காய் | 1.00 |
| 3. | முறையீடு | 5.00 |
| 4. | எண்ணெய்க்காப்பு | 10.00 |
| 5. | உதிரமாலை | 5.00 |
| 6. | அபிஷேகம் | 5.00 |
| 7. | பால்அபிஷேகம் | 3.00 |
| 8. | முடிகயிறு | 2.00 |
| 9. | தனிவழி | 5.00 |
| 10. | சிறப்புவழி | 25.00 |
| 11. | முடிகாணிக்கை | 10.00 |
| 12. | கனிவழிபாடு | 3.00 |
| 13. | வழிபாடு | 50.00 |
| 14. | அபிஷேக எண்ணெய் | 10.00 |
| 15. | சாத்துபடி | 10.00 |
| 16. | அமாவாசை கட்டளை அர்ச்சனை (உள்நாடு) | 200.00 |
| | அமாவாசை கட்டளை அர்ச்சனை (வெளிநாடு) | 500.00 |

## இதர சேவைக்கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | தங்கமலர் அர்ச்சனை | ரூ. 100.00 |
| 2. | வெள்ளி மலர் அர்ச்சனை | ரூ. 50.00 |
| 3. | திருவிளக்கு வழிபாடு | ரூ. 300.00 |
| 4. | அபிஷேக கட்டணம் (ஒரு கால பூஜைக்கு) | ரூ. 1,000.00 |
| 5. | தங்கரத புறப்பாடு | ரூ. 1,500.00 |

**நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்
ஆனைமலை - பொள்ளாச்சி வட்டம்
கோவை மாவட்டம் - 642 104.

Email : masaniamman@tnhrce.org
Website : www.anaimalaimasaniamman.tnhrce.in



tnhrce.org